FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364130

1. District : சிவகங்கை PS: உலகாம்பட்டி மற்றும் கண்காணிப்புப் Year: 2026 FIR No.: 11/2026 Date: 21.08.2026
மாவட்டம் காவல்நிலையம் பிரிவு ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988, Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: as amended by the P.C. (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 14.08.2026 Date to : 17.08.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 13.30 hrs Time to : 11.30 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 21.08.2026 Time : 09.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time : 09.30 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : எழுத்து மூலமாக
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: கிராம நிர்வாக அலுவலகம், அமராவதி புதூர், சிவகங்கை மாவட்டம் சுமார் 55 கி.மீ வடகிழக்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M. சக்திவேல் (b) Father's/ Husband's Name : முருகப்பன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 70/2026 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : விவசாயம் (g) Address : கு.எண்: 3/37, மேலக்குயவர்ப்பு, கோவிந்தனூர், மானகிரி அஞ்சல், சிவகங்கை மாவட்டம்-630307.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு.S.ராஜ கோபால், கிராம நிர்வாக அலுவலர், அமராவதி புதூர் பிரிவு, சிவகங்கை மாவட்டம்.
2. திருமதி.காந்தி, கிராம உதவியாளர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- No delay -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 21.08.2026 தேதி காலை 09.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது சிவகங்கை மாவட்டம், மானகிரி அஞ்சல், தளக்காவூர், மேலக்குடியிருப்பு, க.எண்.3/37 என்ற முகவரியில் வசிக்கும் முருகப்பன் என்பவரின் மகன் திரு.M.சக்திவேல் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர், குற்றம் சுமத்தப்பட்ட சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், அமராவதி புதூர் குரூப் கிராம நிர்வாக அலுவலர் திரு.ராஜகோபால் மற்றும் கிராம உதவியாளர் திருமதி.சாந்தி ஆகியோரைப் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று, 21.08.2026ம்

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

21/08/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

21/8

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
21.08.2026 at 10.15 hrs

Name: பெயர் (P.THANGARAMAN)
Rank: நிலை DSP/VAO, No. எண்
Sivagangai

சிவகங்கை ஊ.த.க பிரிவு குற்ற எண்.11/2026 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி -

தேதி, சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.11/2026 u/s.7(a) of Prevention of Corruption Act 1988, as amended by the P.C. (Amendment) Act 2018 என வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர் M.சக்திவேல், த/பெ. முருகப்பன், க.எண்.3/37, மேலக்குடியிருப்பு, தளக்காவூர், மானகிரி அஞ்சல், சிவகங்கை மாவட்டம்-630 307, பெறுநர் காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, சிவகங்கை. ஐயா, நான் விவசாயம் செய்து வருகிறேன். எனது உடன் பிறந்த அக்கா மீனாள் என்பவரின் மகள் பானுமதி கணவனை இழந்து சென்னையில் வசித்து வருகிறார். அவரது கணவர் ராஜசேகரின் சொந்த ஊர் அமராவதி புதூர் ஆகும். அவருக்குப் பாத்தியமான பூர்வீக சொத்து விபரம் மற்றும் நான்குமால் கேட்டு அமராவதிபுதூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.ராஜகோபால் அவர்களிடம் பானுமதி 05.06.2026 அன்று மனு செய்துள்ளார். அந்த சர்வே எண்களின் விபரம் காரைக்குடி தாலுகா, புதூர் கிராமம் பட்டா எண் 227 திரு.காசி அம்பலம் மகன் திரு.சுப்பையா என்பவரின் புல எண் மற்றும் உட்பிரிவான 48(1), 48(2C), 48(2K), 48(2Q), 48(5), 62(23A), 81(4B), 83(29), 84 (4A), 88(16), பட்டா எண். 113ல் புல எண்ணும் உட்பிரிவும் 75(6B2), 76(10A1), 76(10A2), 86(16C) மொத்தம் 14 நம்பர் ஆகும். எனது அக்கா மகள் பானுமதி என்பவர் கிராம நிர்வாக அலுவலரை சந்தித்து மேற்கண்ட மனு தொடர்பான நான்குமால் மற்றும் சொத்து விபரம் குறித்து அறிக்கை பெற்றுத் தருமாறு என்னிடம் கூறி இருந்தார். அதன்படி கடந்த 14.08.2026ம் தேதி மதியம் சுமார் 01.30 மணியளவில் அமராவதி புதூர் கிராம நிர்வாக அலுவலகம் சென்று கிராம நிர்வாக அலுவலரை பார்த்தபோது அவர் அலுவலகத்தில் இல்லை. அதனால் அங்கிருந்த கிராம உதவியாளர் திருமதி.சாந்தி அவர்களை சந்தித்து எனது அக்கா மகளான பானுமதியின் மனு தொடர்பான சொத்து விபரம் மற்றும் நான்குமால் குறித்து கேட்டதற்கு, அவர் அந்த மனுவை எடுத்து பார்த்துவிட்டு "மொத்தம் 14 புல எண்ணும் உட்பிரிவும் உள்ளது. ஒவ்வொரு உட்பிரிவிற்கும் தலா ரூபாய் 500 வீதம் மொத்தம் ரூபாய் 7,000/- கிராம நிர்வாக அலுவலருக்கும், ரூபாய் 3,000/- எனக்கும் தர வேண்டும்" என கூறினார். நான் எனது அக்கா மகள் பானுமதியிடம் தகவல் சொல்லிவிட்டு வருகிறேன் என்று சொல்லி வந்துவிட்டேன். கடந்த 17.08.2026ம் தேதி சுமார் காலை 11.30 மணியளவில் நான் அமராவதிபுதூர் கிராம நிர்வாக அலுவகத்திற்கு நேரில் சென்று கிராம நிர்வாக அலுவலர் திரு.ராஜகோபால் அவர்களிடம், நான்குமால் மற்றும் சொத்து விபரம் அறிக்கை தயார் செய்து தர உங்களது கிராம உதவியாளர் திருமதி.சாந்தி, பணம் ரூபாய் 7,000/- உங்களுக்கும், ரூபாய் 3,000/- அவருக்கும் என

மொத்தம் ரூ.10,000/- தருமாறு கேட்ட விபரத்தை சொன்னபோது, VAO திரு.ராஜகோபால், அந்த அறையிலிருந்து கிராம உதவியாளர் திருமதி.சாந்தியை பார்த்து, "ஏம்மா, அது என்னனு பார்த்து முடிச்சு விடும்மா" என்று சொன்னார். பின்னர் நான் அந்த அறையிலிருந்த கிராம உதவியாளர் திருமதி சாந்தியை சந்தித்து. நான்குமால் குறித்து கேட்டதற்கு, அவர் "நான் கேட்ட பணத்தை கொண்டு வந்திருக்கிறீர்களா" என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான், "நாங்கள் ரொம்ப கஷ்டப்படுகிறோம், குறைத்துக்கொள்ளுங்கள்" என்று சொன்னதற்கு, அவர் என்னிடம், "இங்கேயே வெயிட் பண்ணுங்க, நான் சார்க்கிட்ட கேட்டுக்கிட்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு, அவர் விஏஓ திரு.ராஜகோபாலை பார்த்து பேசிவிட்டு வந்து என்னிடம், "மொத்தம் ரூ.10,000/-ல் ரூபாய் 5,000/-யை குறைத்துக்கொண்டு, நான்குமால் மற்றும் சொத்து விபரம் கொடுப்பதற்கு ரூ.5,000/- வாங்க சொல்லியிருக்காங்க, இதுக்கு மேல குறைக்க முடியாது, பணம் கொடுத்தால் தான் உங்கள் இடங்களுக்கு நான்குமாலும், சொத்து விபரமும் கிடைக்கும்" என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் அர்ஜெண்ட் வேலைகள் இருக்கு, ரெண்டு மூணு நாள்ல வந்து பார்க்கிறேன், நீங்கள் நான்குமாலும், சொத்துவிபரமும் ரெடி பண்ணி வையுங்கள் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். நான் மேற்படி விபரத்தை எனது அக்கா மகள் பானுமதியிடம் கைபேசியில் தெரிவித்தேன். அவர் சம்மந்தப்பட்ட லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுங்கள் என்று சொன்னதன் பேரில், நான் தங்களிடம் நேரில் வந்து புகார் அளிக்கிறேன். எனவே, சொத்து விபரம் மற்றும் நான்குமால் பற்றி அறிக்கை தருவதற்கு ரூபாய் 5,000/- லஞ்சம் கேட்கும் அமராவதி புதூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.ராஜகோபால் மற்றும் கிராம உதவியாளர் திருமதி.சாந்தி ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இணைப்பு : காரைக்குடி வட்டம், புதூர் கிராமம் பட்டா எண்கள் 227 & 113-ன் நில அளவை ஆவண நகல். இப்படிக்கு, sd/xxxxx (M.சக்திவேல், 21/08/2026).

Sir, Received the complaint on 21.08.2026 at 09.00 hrs, genuineness of the complaint was verified through sources and found to be genuine. The Integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. Found prima facie for the allegation of the complaint. Since, the registration of Regular Case is warranted, the matter is intimated & obtained permission from the SP/SR, V&AC, Chennai, and registered a case in Sivagangai V&AC Crime.No.11/2026 u/s 7(a) of Prevention of Corruption Act, 1988, as amended by the P.C.(Amendment) Act 2018 on

21.08.2026 at 09.30 hrs and took up for investigation. sd/xxxx (P.Thangaraman, Dy. Superintendent of Police, V&AC, Sivagangai.).

இந்த வழக்கின் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை சிவகங்கை, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற நீதிபதி அவர்களுக்கும், மற்ற நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன்.

21/8

DEPUTY SUPERINTENDENT OF POLICE
VIGILANCE AND ANTI-CORRUPTION
SIVAGANGAI.